**MC No.** 28/2023 RW-1 19.11.2025

திரு. கிருஷ்ணராஜ் த/பெ. மோகன்தாஸ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :

கடன் மற்றும் சொத்து சிறப்பு பிரமாண பத்திரத்தில் உள்ள கையொப்பம் அனைத்தும் என்னுடையது என்றால் சரிதான். அதை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதில் தவறான சங்கதிகளை கூறினால் தண்டனையும், அபராதமும் உண்டு என்ற விவரம் தெரிந்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எனது வங்கி கணக்கு புத்தகத்தின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஆக்சிஸ் வங்கி மதுரை கிளையில் வங்கி கணக்கு உள்ளது. இந்த வங்கி கணக்கு புத்தகத்தையும் அதன் கணக்கு பட்டியலையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும். எனக்கும் என் சித்தப்பாவிற்கும் இடையே நடக்கும் வழக்கு விவரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் தாக்கல் செய்யலாம். கடன் மற்றும் சொத்து சிறப்பு பிரமாண பத்திரத்தில் எனது மனைவியின் எந்த விவரத்தையும் நான் பதிவிடவில்லை என்றால் சரிதான், எனக்கு தெரியாது. எனக்கு இந்நீதிமன்றத்திலிருந்து மனுவின் நகல் கிடைக்கப்பெற்றதா என்றால் ஆமாம். மனுதாரரின் சொத்து மற்றும் கடன் சிறப்பு பிரமாண பத்திரத்தின் நகலும், எனது சொத்து மற்றும் கடன் பற்றிய சிறப்பு பிரமாண பத்திரத்தின் நகலும் எனக்கு கிடைக்கப்பெற்றதா என்றால் கிடைக்கவில்லை. இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து சிறப்பு பிரமாண

பத்திரத்தின் நகலை நான் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரிதான், சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் நான் பெற்றுக் கொள்ளவில்லை. இந்த வாழ்க்கை பொருளுதவி மனு தாக்கல் செய்வதற்கு முன்பே HMOP No.455/2023 விவாகரத்து மனு தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரிதான். HMOP No.03/2024 விவாகரத்து மனு கும்பகோணம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனக்கும் மனுதாரருக்கும் 12.02.2020 அன்று திருமணம் நடைப்பெற்றது என்றால் சரிதான். எனக்கும் மனுதாரருக்கும் இந்த திருமணம் இரண்டாவது திருமணம் என்றால் சரிதான்.

2) மனுதாரருக்கு ஏற்கனவே திருமணம் ரத்தாகி அதன்பிறகுதான் நான் திருமணம் செய்துக் கொண்டேன் என்றால் அது ஒருதலைபட்ச உத்தரவாகும். எனக்கு நடந்த முதல் திருமணத்தின் விவாகரத்து உத்தரவின் நகலை இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், சேர்ந்து வாழ வேண்டும் என்ற வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கிற்கு எதிருரை தாக்கல் செய்வதற்கு விவரங்கள் சொன்னது நான் தான். மனுதாரர் எனது மனைவி என்ற முறையில் அவரை காப்பாற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் எனக்கு உள்ளது என்றால் சரிதான். மனுதாரர் திருமணத்தின்போது மனுதாரரின் பெற்றோர்கள் நகைகள் மற்றும் சீர்வரிசை சாமான்கள் செய்தார்களா என்றால் செய்தார்கள், எனக்கு பவுன் செயின், பிரேஸ்லெட், மோதிரம் போட்டார்கள். அந்த நகைகள் என்னிடம் தான் உள்ளது. மனுதாரருக்கு திருமணத்தின்போது நகைகள் அணிந்தார்களா என்றால்

அதை நான் கவனிக்கவில்லை. எனது திருமண சிடியை பார்த்தால் மனுதாரர் அணிந்திருந்த நகை பற்றிய விவரங்கள் தெரியவருமான என்றால் சிடி என்னிடம் இல்லை. திருமணத்தின்போது வீடியோ மற்றும் போட்டோ எடுத்தார்கள். அந்த வீடியோ மற்றும் புகைப்படத்தை பார்த்தால் மேற்படி விவரம் தெரியவரும் என்றால் என்னிடம் ஒரே ஒரு போட்டோ மட்டும் தான் உள்ளது. மனுதாரருக்கு அணிவித்த நகைகள் அனைத்தும் என்னிடம் தான் உள்ளது என்றாலும் வழக்கிற்காக என்னிடம் இல்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. முதல் திருமணம் ரத்தானது நீதிமன்ற உத்தரவுதான். நான் மனுதாரருக்கு நகை கொடுத்ததாக சொல்லியுள்ளேன், அது தொடர்பாக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வெள்ளி, சில்வர், பித்தளை பாத்திரங்கள் என் வீட்டில் உள்ளதா என்றால் வெள்ளி பாத்திரங்கள் இல்லை, சில்வர் மற்றும் பித்தளை பாத்திரங்கள் உள்ளது. நான் திருமணத்திற்கு 2 நாட்கள் முன்பாகவே கும்பகோணத்திற்கு வந்து விட்டேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு முதல் நிச்சயதார்த்தம் நடந்தது என்றால் சரிதான். எனக்கும் மனுதாரருக்கும் திருமண பந்தம் ஏற்படவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

3) மனுதாரரின் பெற்றோர்களும் வயதானவர்கள் என்றால் 80 வயதிருக்கும். என்னை கும்பகோணத்தில் வசிக்கும்படி வற்புறுத்தினார் என்று கூறியுள்ளேன் அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் ஏதாவது புகார் கொடுத்தேனா என்றால் இல்லை,

நான் சேர்ந்து வாழ விருப்பப்பட்டதால் புகார் அளிக்கவில்லை. திருமணத்திற்கு பிறகு சென்னைக்கு தனிக்குடித்தனம் சென்றோம் என்றால் இல்லை, நான், அம்மா, மனுதாரர் ஆகியோர் சென்றோம். அப்போது எந்த நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தேன் என்றால் Hexaware Technologies நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தேன். அப்போது மனுதாரர் இல்லத்தரசியாக இருந்தார், வேலைக்கு எதுவும் போகவில்லை. மனுதாரர் M.Sc., IT முடித்துள்ளார் என்றால் சரிதான். மனுதாரர் என்ன படித்துள்ளார் என்பதை மனுதாரர் தான் நிரூபிக்க வேண்டும் என்று சொல்லியுள்ளது தவறு என்றால் அவரது சான்றிதழை என்னிடம் காண்பிக்கவில்லை அதனால் அவ்வாறு சொல்லியுள்ளேன். மனுதாரர் என்னைவிட்டு 06.06.2020 முதல் பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். 06.06.2020 அன்று சென்னையிலிருந்து கும்பகோணம் வந்தாரா என்றால் மதுரையிலிருந்து மனுதாரர் கும்பகோணம் வந்து விட்டார். மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டிற்கு வந்தபிறகு நான் சென்னையில் வசித்த வீட்டை மார்ச் மாதம் காலி செய்து விட்டேனா என்றால் இல்லை மனுதாரர் என்னுடன் இருந்த காலத்திலே சென்னையில் இருந்த வீட்டை காலி செய்து விட்டு மதுரைக்கு வந்து விட்டேன், அங்கிருந்துதான் மனுதாரர் கும்பகோணத்திற்கு சென்றார்.

4) எங்கள் திருமணத்தை பதிவு செய்வதற்கு நான் எந்த முயற்சியும் செய்யவில்லை என்றால் சரியல்ல, கொரோனா காலகட்டம் என்பதால் செய்யவில்லை. மனுதாரரின் தந்தை அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். அவர் தனது

மகளுக்கு வங்கியில் வைப்பீடு செய்திருந்தார் என்றால் தெரியாது. மேற்படி விவரம் எனக்கு தெரியும் என்றாலும், அந்த தொகையை எடுத்து தர சொல்லி மனுதாரரை வற்புறுத்தினேன் என்றாலும் சரியல்ல. குறிப்பாக பெண்கள் வீட்டு வேலை செய்த பிறகு டிவி பார்ப்பதும், போன் பேசுவதும் வழக்கம் என்றால் சரிதான். மனுதாரர் அவருக்குரிய கடமையை செய்து விட்டு வீட்டில் இருக்கும்போது அவரை தண்டச்சோறு என்று கூறினேன் என்றால் சரியல்ல, அவ்வாறு சொல்லவில்லை. எங்கள் வீட்டில் வேலை செய்வதற்கு வேலையாள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள், கொரோனா காலகட்டத்தில் நிறுத்திவிட்டோம். மனுதாரரை திருமணம் முடித்த பிறகுதான் வேலையாட்களை நிறுத்தி விட்டோம் என்றால் சரியல்ல. என் தாயார் தான் மளிகை சாமான் மற்றும் காய்கறிகளை வாங்கி வருவார் என்றால் நானும் என் தாயாரும் செல்வோம். எங்கள் திருமணத்திற்கு பிறகு மனுதாரரை எங்கேயாவது வெளியூர் போன்ற இடங்களுக்கு அழைத்து சென்றேனா என்றால் சினிமா, மால் போன்றவற்றிற்கு அவர் வரமாட்டார், கொரோனா காலகட்டம் என்பதால் வெளியூர் செல்லவில்லை. மனுதாரர் என்னுடன் சேர்ந்து சாப்பிட மாட்டாரா என்றால் நானும் மனுதாரரும் சேர்ந்து தான் சாப்பிடுவோம். நானும் என் தாயாரும் தான் ஒன்றாக சாப்பிடுவோம் என்றாலும் நானும் மனுதாரரும் ஒன்றாக சாப்பிடுவோம் என்று பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல, நாங்கள் இருவரும் ஒன்றாகத்தான் சாப்பிடுவோம். நானும் என் தாயாரும் வெளியில் செல்லும் போது வீட்டை பூட்டி செல்வோம் என்றால் இல்லை, தாழ்ப்பாள் போட்டு செல்வோம்.

5) என் தாயாரின் துன்புறுத்தலின் காரணமாக மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது என்றால் சரியல்ல. மனுதாரர் என்னை விட்டு பிரிந்த பிறகு மனுதாரரின் சித்தப்பா என்னிடம் சமாதானம் பேச வந்தார் என்றால் இல்லை, யாரும் வரவில்லை. சேர்ந்து வாழ வேண்டும் என்று நான் அறிவிப்பு அனுப்பியபோது மனுதாரர் உடல்நிலை சரியில்லாமல் அன்பு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தார் என்றால் முதல் வாய்தாவிற்கு மட்டும்தான் அவர் வந்தார், மற்ற வாய்தாக்களுக்கு ஒன்னரை வருடம் மனுதாரர் வரவில்லை. ஏன் மனுதாரர் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் தெரிந்து கொள்ளவில்லை. HMOP No.46/2021 வழக்கில் இந்த மனுவின் மனுதாரர் தரப்பில் எந்த வழக்கறிஞரும் ஆஜராகவில்லை என்றால் இரண்டு பெண் வழக்கறிஞர்கள் ஆஜராகியிருந்தார்கள். அவர்கள் யார் என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. மனுதாரர் கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் சரிதான், பொருட்கள் கேட்டு புகார் கொடுத்தார். அந்த புகாரில் நான் காவல் நிலையத்தில் ஆஜரானேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் சீர்வரிசை சாமான்களை ஒப்படைப்பதாக எழுதிக் கொடுத்து சென்றேன் என்றால் நீதிமன்றம் மூலமாக ஒப்படைப்பதாக எழுதினேன். எழுதிக்கொடுத்தபடி இந்த வழக்கிலோ, விவாகரத்து வழக்கிலோ சீர்வரிசை சாமான்களை ஒப்படைக்கவில்லை என்றால் நீதிமன்றம் உத்தரவிடும்பட்சத்தில் ஒப்படைக்க தயாராக உள்ளேன். என்னிடம் இரண்டு மற்றும் நான்கு சக்கர

வாகனங்கள் இல்லை. Hexaware Technologies நிறுவனத்தில் வேலை பார்த்ததற்கான சம்பள பட்டியல் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது தாக்கல் செய்கிறேன். எனக்கு திண்டுக்கல்லில் வீடு உள்ளதா என்றால் உள்ளது. அது மாண்புமிகு. மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கில் உள்ளது.

6) விவசாய நிலம் உள்ளதா என்றால் விவசாய நிலம் எதுவும் இல்லை. வீடு வழக்கில் நிலுவையில் உள்ளது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது சொத்து மற்றும் கடன் விவர சிறப்பு பிரமாண பத்திரத்தில் சரியான விவரங்களை கொடுக்காததால் என் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது என்றால் சரியல்ல, நான் சரியான விவரங்கள் தான் கொடுத்துள்ளேன். மனுதாரர் தனது வயதான பெற்றோர்களுடன் இருப்பதால் அவரது அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய கடமைப்பட்டவர் என்றால் அவர் படித்திருக்கிறார் அதனால் தேவையில்லை. மனுதாரரின் சூட்கேஸ், கைப்பை என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். மனுதாரருக்கு என்னிடமிருந்து பணம் பறிக்க வேண்டிய அவசியமில்லை என்றாலும், அவரது அத்தியாவசிய தேவைகளுக்கு தான் ஜீவனாம்சம் கேட்டுள்ளார் என்றால் என்னுடன் சேர்ந்து வாழ சொல்லுங்கள். நான் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துவிட்டு தற்போது மனுதாரருக்கு கொடுக்க வேண்டிய ஜீவனாம்ச தொகையை கொடுக்காமல் தவிர்ப்பதற்காக சேர்ந்து வாழ்வதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**மனுதாரரை தவிக்க விட்டு விட்டு நான் சுகபோகமாக வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
Thanjavur at Kumbakonam.